http://www.kamakotidevotees.org/media/kanchimahan/srinivasa_kalyanam.wmv



பி. சுவாமிநாதன்

# திருமலை திருக்கல்யாண உற்சவம்!



திருப்பதி – மனதால் நினைத்த மாத்திரத்திலேயே பரவசத்தையும் பக்தியையும் ஒருங்கே அருளும் தெய்வீகத் தலம். கலி யுகத்தில் எண்ணற்ற அற்புதங்கள் நடைபெறுகிற புண்ணிய பூமி. “ஏடு கொண்டலு வாடா... கோவிந்தா, கோவிந்தா!” என்கிற பக்தர்களின் கோஷத்தை அந்த மலைப் பிரதேசத்தில் எங்கு கேட்டாலும், நம் நாடி நரம்புகள் அத்தனையும் முறுக்கேறி, அவன் நாமத்தை உச்சதாயியில் பக்திபூர்வமாக முழங்கத் தோன்றும்.

‘எந்த ஒரு பக்தருமே நினைத்தவுடன் திருப்பதிக்குப் பயணித்து விட முடியாது... அதற்கான அழைப்பு அந்த வேங்கடவனிடம் இருந்து வந்தால் மட்டுமே நாம் யாத்திரை யைத் துவக்க முடியும்!’ என்று சொல்வார்கள். திருமலை வேங்கடவனை தரிசிப்பது என்பது அவன் செயல். அவனது அழைப்பின் பேரில் நாம் அங்கே செல்கிறோம்! திருமலை திருப்பதிக்கு இரவு- பகல் என்கிற வித்தியாசமெல்லாம் கிடையாது. இருபத்துநாலு மணி நேரமும் இடையறாமல் பரபரப்பாக இயங்கிக் கொண்டே இருக்கும். ‘காலத் தைக் காட்ட வேண்டுமே!’ என்ற கடமைக்காக சூரியனும் சந்திரனும் தத்தமது வேளைகளில் வான்வெளியில் வழிந்தோடிக் கொண்டிருப்பார்கள்.

‘வேங்கடம்’ என்றால் என்ன? ‘வேம்’ என்றால் அழிவு இல்லாதது. ‘கடம்’ என்றால் செல்வம்.

சொல்லுங் கள்... திருமலையை, வேங்கடம் என்று அழைப்பது பொருத்தம்தானே?! (வேறொரு பொருளும் சொல்லப்படுவதுண்டு) வேங்கடம் என்கிற பெயர், கலி யுகத்தில் ஏற்பட்டது.

விசேஷ தினங்களில் நாளொன்றுக்கு இங்கு காணிக்கையாகக் கொட்டிக் குவிக்கப்படும் தொகையே கோடியைத் தாண்டும்! உலகத்திலேயே பண வருமானம் அதிகம் உள்ள திருத்தலங்களில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் எப்போதோ முதலிடத்துக்கு வந்தாயிற்று என்கிறார்கள்.




திருமலை திருப்பதியில் ஸ்ரீவேங்கடேச பெருமாளை தரிசனம் செய்ய ஒவ்வொரு நாளும் ஏகப்பட்ட சேவைகள் இருக்கின்றன. சுப்ரபாத சேவை, தோமாலை சேவை, ஏகாந்த சேவை உட்பட பல சேவைகள் இருக்கின்றன. திருமலையில் தினமும் நடக்கும் முக்கியமான விசேஷங்களுள் ஒன்று ஸ்ரீநிவாசர்- பத்மாவதி தாயார் திருக்கல்யாண உற்சவம். ரூபாய் ஆயிரம் பணம் கட்டி முன்கூட்டியே அனுமதிச் சீட்டு வாங்கிய பக்தர்கள் இந்தத் திருக்கல்யாண உற்சவத்தில் கலந்து கொண்டு வேங்கடவனின் அருளைப் பெறலாம். ஒரு சீட்டுக்கு இரண்டு பேர் கலந்து கொள்ள முடியும். பொதுவாக, தம்பதியர் கலந்து கொள்வது வழக்கம். இந்தத் திருக்கல்யாண உற்சவத்தின் முடிவில் ஒரு வஸ்திரம், லட்டு, மஞ்சள் அட்சதை போன்றவை பிரசாதமாக வழங்கப்படும்.

வீட்டில் திருமணம் ஆகாமல் இருப்பவர்களுக்கு விரைவில் மணமாகி இல்வாழ்க்கையில் சிறக்க வேண்டும் என்பதற்காகவும், தங்களுக்கு நல்லபடியாகத் திருமணத்தை முடித்துக் கொடுத்த பெருமாளுக்கு நன்றி சொல்லும் விதமாகவும் தம்பதி சமேதராக இந்தத் திருக்கல்யாண உற்சவத்தில் கலந்து கொள்கின்றனர். தவிர, குடும்ப நலனுக்காகவும் தம்பதியர் இந்த உற்சவத்தில் கலந்து கொள்வதுண்டு.

இந்தத் திருக்கல்யாண உற்சவத்தில் கலந்து கொள்ளக் கூட்டம் அலை மோதும். இதற்கு முன் பதிவும் உண்டு. ஒவ்வொரு நாளும் சுமார் 500 அனுமதிச் சீட்டுகள் வரை கொடுக்கப்படுகின்றன. இன்றைய தேதியில் திருக்கல்யாண உற்சவத்துக்குப் பணம் கட்டினால், சுமார் ஒரு வருடத்துக்குப் பிறகு நாள் குறித்து நமக்கு ரசீது தருவார்கள்.



ஷர்மா



தாமல் ராமகிருஷ்ணன்



திருப்பதி-திருமலை ஆலய அமைப்பில் விழா மேடை...



இத்தகைய ஸ்ரீநிவாஸர்- பத்மாவதி தாயார் திருக்கல்யாண உற்சவத்தை இதுவரை திருமலையில் மட்டுமே நடத்தி வந்தார்கள். சமீப காலமாக, ஸ்ரீதேவி- பூதேவி சமேத ஸ்ரீநிவாஸப் பெருமாளின் உற்சவர் விக்கிரகத்தை வெளியூருக்கு எடுத்துச் சென்று, பிரமாண்டமான அரங்கங்களில் திருக்கல்யாண உற்சவத்தை நடத்தி வருகிறார்கள். ஆந்திராவில் சில நகரங்களில் நடத்தி இருக்கிறார்கள். தவிர பெங்க ளூர், தமிழ்நாட்டில் சென்னை (கோயம்பேடு), சேலம், ஈரோடு, கோவை போன்ற மாநகரங்களில் இந்த உற்சவம் நடந்து முடிந்துள்ளது. அடுத்து, இந்த பாக்கியம் பெற இருக்கும் தமிழக நகரங்கள் மதுரை மற்றும் திருச்சி என்று சொல்லப்படுகிறது.

“திருமலைக்கு நேரில் வந்து அனைத்து தரப்பட்ட பக்தர்களாலும் பணம் கட்டி திருக்கல்யாண உற்சவத் தைக் கண்டுகளிக்க முடியாது. அனைவரும் மலை மேல் வந்து வேங்கடவன் திருக்கல்யாணத்தை தரிசிக்க முடியாததற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் பண வசதி, வயோதிகம், உடல் ஊனம் என்று சிலவற்றைக் குறிப்பிடலாம். சிலர் திருப்பதிக்குக் காணிக்கை வேண்டிக் கொண்டு, நேரில் வந்து அதைச் செலுத்த முடியாமலே இருப் பார்கள். இத்தகைய பக்தர்களை மனதில் கொண்டே இந்தத் திருக்கல்யாண உற்சவத்தை வெளியூர்களில் நடத்தும் வைபவத்தைத் துவக்கி வைத்தோம்.



மாங்கல்யம்-பக்தர்கள் தரிசனத்துக்காக...



கோவிந்தா... கோவிந்தா...

திருமலை க்ஷேத்திரத்தில் தினமும் திருக்கல்யாண உற்சவம் காணும் விக்கிரகம் எப்போதும் அங்கேயேதான் இருக்கும். திருமலையில் அர்ச்சகர்கள் வீட்டில் தினமும் பயபக்தியுடன் ஆராதிக்கப்பட்டு வரும் பகவான் விக்கிரகத்தைத்தான் (இது வேறு விக்கிரகம்) வெளியூர்களுக்கு எடுத்துச் சென்று திருக்கல்யாண வைபவம் நடந்து வருகிறது. இதற்கெனவே உள்ள பிரதான பட்டாச்சார்யர்கள் ஒவ்வோர் ஊருக்கும் வந்து திருமலையில் நடப்பது போலவே திருக்கல்யாண

உற்சவத்தை தேவஸ்தானத்தின் சார்பாக நடத்தி வைக்கிறார்கள்!” என்றார் திருப்பதி திருமலை தேவஸ்தான உயர் அதிகாரி ஒருவர்.

மகாராஷ்டிர மாநிலத் தலைநகரான மும்பையில் பொதுமக்களின் தரிசனத்துக்காகக் கடந்த டிசம்பர் மாதம் 2 மற்றும் 3-ஆம் தேதிகளில் திருக்கல்யாண உற்சவம் நடந்தது. சில தனியார் அமைப்புகளின் உதவியுடன் திருமலை திருப்பதி தேவஸ்தானம், மும்பை மாநகரத்தில் பாந்த்ரா பகுதியில் நடத்திய இந்தப் பிரமாண்ட ஆன்மிக விழாவில் சுமார் ஐந்து லட்சம் பக்தர்கள் கலந்து கொண்டனர். சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் மாலை நேரத்தில் கோலாகலமாக நடைபெற்ற அந்தத் திருக்கல்யாண வைபவம், மும்பை மாநகரத்தையே குலுக்கியது என்றால் அது மிகையில்லை. நகரத்தில் இரண்டு தனியார் சேனல்கள், இதை ‘லைவ்’ ஆக ஒளிபரப்பின. இதனால், திருக்கல்யாணத்துக்கு நேரில் வந்திருந்து கலந்து கொள்ள முடியாத மும்பைவாசிகள் தங்கள் இல்லத்தில் இருந்தவாறே இந்த அற்புதமான ஆன்மிக நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர்.



திருமலை ஆலயத்தின் பிரதான கோபுரமும், ஆனந்த நிலைய விமானமும் பளிச்சென மின்னிக் கொண்டிருந்த மேடை அமைப்பும், திருப்பதியையே கண்ணுக்குள் கொண்டு வந்தன. இந்த மேடையில் வைத்துதான் திருக்கல்யாண உற்சவம் நடந்தேறியது. மாலை வேளை என்பதால் தகதகக்கும் வண்ண விளக்குகளின் ஒளி உமிழலோடு ஸ்ரீதேவி- பூதேவி சமேத ஸ்ரீநிவாசர் பிரகாசமாகக் காட்சி அளித்தனர்.

காஞ்சி ஸ்ரீஜெயேந்திரர், ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள் ஆகியோர் முன்னிலையில் இந்தத் திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது. மகாராஷ்டிர ஆளுநர் எஸ்.எம். கிருஷ்ணா உட்பட வி.ஐ.பி-கள் பலரும் கலந்து கொண்டு பெருமாளின் அருள் பெற்றனர்.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் சீஃப் எக்ஸிகியூடிவ் ஆபீஸரும் ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான ஏ.பி.வி.என்.ஷர்மா மேடை யில் பேசும்போது, “திருமலையில் தினமும் திருக்கல்யாணம் காணும் மலையப்ப ஸ்வாமி, என்றும் அங்கிருந்து கீழே இறங்கி வர மாட்டார். எனவேதான், வேறு உற்சவர் விக்கிரகங்களை எடுத்துச் சென்று வருகிறோம்.

திருமலைக்கு வெளியே உற்சவர்களை எடுத்துச் சென்று திருக்கல்யாணம் செய்யும் வழக்கம் இன்று ஏற்பட்டதல்ல. இசைமேதை ஸ்ரீஅன்னமாச்சார்யார் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்த முறையைச் செவ்வனே ஆரம்பித்து வைத்து விட்டார். அவர் ஆரம்பித்து வைத்ததை இப்போது மீண்டும் துவக்கி வைத்திருக்கிறோம். அடுத்த கட்டமாக வெளிநாடுகளுக்கும் இந்த உற்சவர் விக்கிரகங்களை எடுத்துச் சென்று அங்குள்ள பக்தர்களும் தரிசிக்கும் வகையில், இந்தத் திருக்கல்யாண உற்சவத்தை நடத்தி வைக்கும் ஓர் எண்ணமும் இருக்கிறது” என்றார்.



இந்தத் திருக்கல்யாண உற்சவ நிகழ்ச்சிகளை ஒவ்வோர் ஊரிலும் லைவ்-ஆகத் தொகுத்து வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர் பிரபல உபன்யாசகர் தாமல் ராமகிருஷ்ணன். பிரமாண்டமான மும்பை மேடையில் திருக்கல்யாண உற்சவத்தைத் துவக்கி வைத்த அவர், “திருமலையில் அர்ச்சகர்கள் கிரஹத்தில் எழுந்தருளியுள்ள இந்தத் திருக்கல்யாண மூர்த்தங்களை, மும்பைவாசிகள் காணக் கிடைத்திருப்பது பெரும் பாக்கியம்!” என்று சுத்தமான தமிழில் பேச்சைத் துவக்கி அசத்தினார். கூடவே, இதற்கான ஆங்கில மொழிபெயர்ப்பையும் அவரே வழங்கினார்.

திருமலையில் திருக்கல்யாண உற்சவம் யாரால், எந்தக் காலகட்டத்தில் பிரபலமானது என்பதையும் மேடையில் கூறத் தவறவில்லை தாமல் ராமகிருஷ்ணன். “பதினைந்தாம் நூற்றாண்டில் வசித்த இசை விற்பன்னர் அன்னமாச்சார்யார்தான், இந்தத் திருக்கல்யாண உற்சவ வைபவத்தைத் துவக்கி வைத்தார். அப்போதே அவர் உற்சவர் விக்கிரகங்களைத் தயார் செய்து திருப்பதியைச் சுற்றி உள்ள கிராமங்களுக்குச் சென்று கீர்த்தனைகளைப் பாடி, திருக்கல்யாணம் நடத்தி, இறைபக்தியைப் பரப்பி வந்தார். ஆகவே, அன்னமாச்சார்யாரை நினைவு கூரும் வகையில் அவரது மூன்று கீர்த்தனைகளைப் பாடிய பின் இந்த நிகழ்ச்சி துவங்கும்!” என்றார் தாமல் ராமகிருஷ்ணன்.



ஸ்ரீஜெயேந்திரரும் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகளும்

கீர்த்தனைகள் முடிந்ததும் (திருமலையில் நடக்கும் திருக்கல்யாண உற்சவத்தின்போது இந்தக் கீர்த்தனைகள் பாடும் வழக்கம் இல்லை!) விஷ்வக்சேனா ஆராதனம் (மகாவிஷ்ணுவின் பிரதிநிதியான விஷ்வக்சேனரை மேடையில் எழுந்தருளச் செய்தல்), புண்யாகவாஜனம் (மேடையைச் சுத்தி செய்தல்), அங்குரார்ப்பணம் (பாலிகை சமர்ப்பித்து முப்பத்து முக்கோடி தேவர்களையும் வரவழைத்தல்), கங்கணதாரணம் (ஸ்ரீதேவி- பூதேவி, பெருமாள் மற்றும் இந்தத் திருமணம் நடத்தி வைக்கும் அர்ச்சகர் ஆகிய நால்வருக்கும் கங்கணம் எனப்படும் கயிறைக் கையில் கட்டி விடுவது), அக்னிப் பிரதிஷ்டை (ஹோமம் வளர்த்தல்), வஸ்திரம் சமர்ப்பித்தல் (ஆகாசராஜனின் சீராக அவன் வஸ்திரத்தை ஸ்ரீதேவி, பூதேவி மற்றும் பெருமாளுக்குச் சார்த்துதல்), திருமாங்கல்ய பூஜை, திருமாங்கல்ய தாரணம், மாலை மாற்றுதல், தேங்காய் உருட்டுதல் (ஆண்டாள் நாச்சியாரின் 'வாரணமாயிரம்' எனத் தொடங்கும் பாசுரங்களைப் பாடி தேங்காய் உருட்டுகிறார்கள். இதற்காக அன்னமாச்சார்யார் குடும்பத்தைச் சேர்ந்த 'தாளப்பாக்கம் பரம்பரையினர்' ஒவ்வோர் ஊருக்கும் வந்து தேங்காய் உருட்டுகிறார்கள்), மகா ஆரத்தி எடுப்பது என்று இந்தத் திருக்கல்யாண உற்சவம் வைதீக சம்பிரதாயத்தில் இருந்து துளியும் பிசகாமல் நடந்தேறியது.

'மகா ஜன சங்கல்பம்' செய்து கொள்ளும்போது உலக நலனுக்காக இந்த உற்சவம் மும்பையில் நடப்பதாக அறிவிக்கப்பட்டது. சங்கல்பம் செய்யும் அர்ச்சகர், அதற்குண்டான மந்திரங்களை நிறுத்தி நிதானமாகச் சொல்ல... கூடி இருந்த லட்சக் கணக்கானவர்களும் அந்த மந்திரங்களைச் சொல்லி சங்கல்பம் செய்து கொண்டது சிறப்பு!

காஞ்சி ஸ்ரீசங்கர மடத்தின் பரம பக்தரான மும்பை சங்கர் என்பவர், இந்த உற்சவ விழா கமிட்டிக்குத் தலைவராக இருந்து செயல்பட்டார். மிக அழகாகத் திட்டமிட்டு, இந்தக் கல்யாண வைபவத்தைக் கன ஜோராக முடித்து, பக்தர்களை மகிழ வைத்த விழா அமைப்பாளர்களைப் பாராட்டியே ஆக வேண்டும்!

– படங்கள்: சு. குமரேசன்

http://www.kamakotidevotees.org/media/kanchimahan/srinivasa_kalyanam.wmv

Please visit the above link for small video clippings of each segment of the whole Kalyana Utsav.